# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம்

---

(1998, ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, ஏப்பிறல் மாதம் 30 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஒ. 7/98

**கல்வி நிறுவனங்களிலிருந்து பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் கொடூரமான, மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான முறையில் நடாத்தப்படுதலையும் ஒழிப்பதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (1) கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே பகிடிவதை புரிகின்ற அல்லது அதில் பங்குபற்றுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குக் கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆளுக்கெதிராக தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறும் கட்டளையிடப்படலாம். பகிடிவதை.

(2) பகிடிவதை புரிகையில் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவருக்கு அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவருக்குப் பாலியல் தொந்தரவை அல்லது பாரதூரமான காயத்தினை ஏற்படுத்துகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆளுக்கெதிராக தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறும் கட்டளையிடப்படலாம்.

குற்றவியல் அச்சுறுத்தல்.

3. கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் (இப்பிரிவில் "பலியானவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) உடலுக்கு நற்பெயருக்கு அல்லது ஆதனத்துக்கு அல்லது பலியானவர் வேறு எந்தவொரு ஆளில் அக்கறையுடையவராக இருக்கின் றாரோ அந்த ஆளின் உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறுவிளைவிப்பதாக பலியானவரை அச்சத்துக்கு உட்படுத்தும் எண்ணத்துடன் அல்லது பலியானவர் எந்தச் செயலைச் செய்யுமாறு சட்டப்படி தேவைப்படுத்தப்பட வில்லையோ அந்தச் செயல் எதனையும் செய்யுமாறு அல்லது எந்தச் செயலைச் செய்வதற்கு பலியானவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்யாதுவிடுமாறு வற்புறுத்தும் எண்ணத்துடன் வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அச்சுறுத்துகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை யிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற் றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

பணயம் வைத்தல்.

4. எந்தச் செயலின்மூலம் கல்வி நிறுவனமொன்றின் எவ ரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரின் அல்லது வேறு ஆளின் சொந்தச் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் அத்தகைய கல்வி நிறுவனத்திற்குள்ளாக அல்லது அத்தகைய கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்தின்கீழும் கட்டுப்பாட்டின் கீழுமுள்ள எவையேனும் வளவுகளுக்குள்ளாக சட்டமுறையான நியாயப்படுத்துதல் இல்லாமலும் அத்தகைய மாணவரை, பணியாட்டொகுதி உறுப்பினரை அல்லது வேறு ஆளை குறிப்பிட்டவொரு செயல் நெறிமுறையை மேற்கொள்ளு மாறு வற்புறுத்தும் நோக்கத்திற்காகவும் தடைசெய்யப்படு கின்றதோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன் பேரில் ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

முறைகேடாகத் தடுத்து வைத்தல்.

**5.** கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை, அத்தகைய மாணவர் அல்லது உறுப்பினர் எந்தத் திசையை நோக்கிச் செல்வதற்கு உரிமைகொண்டுள்ளாரோ அந்தத் திசையில் செல்வதைத் தடைசெய்கின்றவாறான அத்தகைய முறையில் சட்டவிரோத மாகத் தடுக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குக் கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

சட்டவிரோதமாக மறித்து வைத்தல்.

**6.** கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவரை குறித்தசில சுற்றுவட்ட எல்லைகளுக்கும் அப்பால் செல்வதைத் தடைசெய்யக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை சட்ட விரோதமாக மறித்துவைக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதவன்மீது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

கல்வி நிறுவனமொன்றில் வலோத்கார மாக இருப்பாட்சி கொள்ளுதலும் ஆதனத்தைச் சேதப் படுத்துதலும்.

**7.** (1) கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின்கீழுள்ள எவையேனும் வளவுகளை சட்டபூர்வமான காரணமின்றி, வலோத்காரமாக இருப்பாட்சி கொள்ளுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் சொத்தழிவு செய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஐயாயிரம் ரூபா அல்லது அத்தகைய ஆதனத்திற்கு விளைவிக்கப்பட்ட இழப்பின் அல்லது சேதத்தின் தொகையில் மூன்று மடங்கு என்பவற்றுள் எத்தொகை கூடுதலானதோ அத்தொகையினதான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

வெளியேற்றப்படுவதற்கான அல்லது பதவி நீக்கப்படுவதற்கான கட்டளைகள்.

8. இச்சட்டத்தின்கீழ் ஆள் ஒருவர் தவறொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றமானது, தவறின் பாரதூரத் தன்மையைக் கருத்திற்கொண்டு—

(அ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் கல்வி நிறுவனமொன்றின் மாணவர் ஒருவராக இருக்கும் விடயத்தில், அத்தகைய ஆள் அத்தகைய நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம்;

(ஆ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவராக இருக்கும் விடயத்தில், அத்தகைய ஆள் அத்தகைய கல்வி நிறுவனத்திலிருந்து பதவிநீக்கஞ்செய்யப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

பிணை.

9. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரைமூலம் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவரால் தவிர, பிணையில் விடுவிக்கப்படுதலாகாது. பிணை வழங்குவதில் தமது தற்றுணிபைப் பிரயோகிக்கையில் அத்தகைய நீதிபதி 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய குற்றத் தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டுள்ள விடத்தும் அத்தகைய ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்ற மானது, தவறின் பாரதூரமான தன்மையையும் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட ஆளின் முன்வரலாறுகளையும் கருத்திற்கொண்டு அத்தகைய ஆளைப் பிணையில் விடுவிக்கலாம் அல்லது விடு விக்க மறுக்கலாம்.

*இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்ட அல்லது குற்ற வாளியாகக் காணப் பட்ட ஆட்களுக்கு குற்ற வியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடு கள் ஏற்புடைத்தாகா.*

**10.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திலுள்ளது எது எவ்வாறிருப்பினும் —

(அ) அச்சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது அதன் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் விடயத்தில் ஏற்புடைத்தாகமாட்டாது ;

(ஆ) அச்சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது அதன் முன்னிலையில் குற்றவாளி என வழக்குரைக்கும் அல்லது குற்றவாளியாகக் காணப்படும் எவரேனும் ஆளின் விடயத்தில் ஏற்புடையனவாகமாட்டா.

*இச்சட்டத்தின்கீழான தவறுகள் பிடியாணை யின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப் படுதல்.*

**11.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், அச்சட்டத்தினது ஏற்பாடுகளின் ஏற்புடைமையின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழான சகல தவறுகளும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

சான்றிதழ்.

**12.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் வழக்குத் தொடுப்பதில் ஆளெவரும் கல்வி நிறுவனமொன்றில் மாணவர் ஒருவரா அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவரா அல்லது எவையேனும் வளவுகள் அல்லது ஏதேனும் ஆதனம் கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டினதும் கீழுள்ள ஆதனமா என்னும் கேள்வி எழுமிடத்து, அதன்கண் பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் அத்தகைய கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒருவர் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் ஆவார் அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வளவுகள் அல்லது ஆதனம் அத்தகைய கல்வி நிறுவனத்தின் அல்லது அதன் முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டினதும் கீழுள்ள ஆதனமாகும் என்னும் பயன்பட அத்தகைய கல்வி நிறுவனத்தின் தலைமையதிகாரியின் அல்லது வேறு அலுவலரின் கைப்பட்டதாகக் கருதப்பட்ட சான்றிதழொன்று கையொப்பத்தின் எண்பிப்பு இல்லாமலே, சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற் பாலதாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்ற சான்றாதலும் வேண்டும்.

சாட்சியத்தில் கூற்றின் ஏல்தகவு

**13.** (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கான விளக்கமொன்றின்போது, அத்தகைய தவறு பற்றிய ஏதேனும் புலனாய்வில் முன்னர் அவரால் கொடுக்கப்பட்ட கூற்றொன்றில் ஏதேனும் முக்கியமான விடயத்தில் வெளிப்படையாகவோ அல்லது அவசியமான உட்கிடையாகவோ முரண்படுவாராயின் அக்கூற்று செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றி உரிய விசாரணை செய்தபின்னர், எல்லாச் சூழ்நிலைகளிலும் பாதுகாப்பானதும், நீதியானதும் என நீதிவான் கருதினால் —

(அ) அத்தகைய கூற்று சுயேச்சையான மூலமொன்றிலிருந்து வரும் சாட்சியத்தினால் முக்கியமான விவரங்களில் ஒப்புறுதிப்படுத்தப்படுமாயின், புலனாய்வின்போது சாட்சியால் கொடுக்கப்பட்ட கூற்றொன்றின் மீது செயலாற்றுவதும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய விளக்கத்தின் முடிவில் நீதித்துறை நடவடிக்கையொன்றின் கட்டமொன்றில் வேண்டுமென்றே பொய்ச்சாட்சியம் கொடுத்தமைக்கான குற்றச்சாட்டொன்றின்மீது அத்தகைய நீதிமன்றத்தின் முன்னிலையில் அத்தகைய சாட்சியை விளக்கத்திற்கு உட்படுத்துவதும்,

அவருக்கு சட்டமுறையானதாதல் ஆகும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் விளக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டில் சார்த்துரைக்கப்பட்ட முரண்பாடான கூற்றுக்களைச் செய்தார் என எண்பிப்பது போதுமானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூற்றுக்களில் எது பொய்யானது என எண்பிப்பது அவசியமற்றதாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவை முதலியவற்றின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக இருத்தலும் அவற்றை மதிப்புக் குறைப்பனவாக இல்லாதிருத்தலும்.

**14.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவையின், 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக இருத்தலும் அவற்றை மதிப்புக் குறைப்பனவாக இல்லாதிருத்தலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான விளக்கங்களுக்கும், மேன்முறையீடுகளுக்கும் முன்னுரிமை அளித்தல்.

**15.** இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஆளின் விளக்கத்திற்கும், அத்தகைய ஏதேனும் தவறுக்குமாக எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கு எதிரான ஏதேனும் மேன்முறையீட்டின் கேட்புக்கும், அத்தகைய குற்றத்தீர்ப்பு மீது விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைத் தீர்ப்புக்கும் ஒவ்வொரு நீதிமன்றமும் முந்துரிமை அளித்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**17.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"குற்றவியல் வலோத்காரம்", "அச்சம்", "வலோத்காரம்", "கடும் காயம்", "சொத்தழிவு" என்பன தண்டனைச் சட்டக்கோவையில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்தப் பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"கல்வி நிறுவனம்" என்பது –

(அ) உயர் கல்வி நிறுவனமொன்று ;

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் அத்தியாயம் 11 என்பதன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனம் ;

(இ) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பௌத்த, பாளி பல்கலைக்கழகம் ;

(ஈ) 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்த சிராவக்க பிக்கு பல்கலைக் கழகம் ;

(உ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலை, தொழிற்கல்விச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவகம் ;

(ஊ) 1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை தொழில்நுட்பக் கல்வி நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்தர தொழில்நுட்ப நிறுவகம் ;

(எ) 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, பிரிவென கல்விச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அரச நிதியத்திலிருந்து மானியங்களைப் பெறுகின்றதுமான பிரிவென ஒன்று அத்துடன், அச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பிரிவென பயிற்சி நிறுவகமொன்றை யும் உள்ளடக்கும் ;

(ஏ) இலங்கை சட்டக் கல்லூரி ;

(ஐ) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் ;

(ஒ) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கல்விக் கல்லூரிகள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட கல்விக் கல்லூரி ஒன்று அல்லது அரசாங்க பயிற்சிக் கல்லூரி ;

(ஓ) (185 ஆம் அத்தியாயமான) கல்விக் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அரசாங்கப் பாடசாலை ஒன்று அல்லது உதவி பெறும் பாட சாலை ஒன்று, உதவி பெறாத பாடசாலை ஒன்று,

எனப்பொருள்படும் என்பதுடன் கல்வி, போதனை அல்லது பயிற்சி வழங்கும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தையும் உள்ளடக்கும்.

"கல்வி நிறுவனம் ஒன்றின் தலைமையதிகாரி" என்பது அத்தகைய கல்வி நிறுவனத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் பொறுப்பிக்கப்பட்ட துணை வேந்தர், மகோபாத்தியாயர், பணிப்பாளர், தலைவர், அதிபர் அல்லது எவ்வாறாவது பெயர் குறித் தொதுக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் என்று பொருள்படும் ;

"உயர் கல்வி நிறுவனம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"பகிடிவதை" என்பது கல்வி நிறுவனம் ஒன்றின் மாணவர் ஒருவருக்கு அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவருக்கு உடல் அல்லது உளரீதியான ஊறு அல்லது மனநோய் அல்லது அச்சம் ஏற்படுத்து கின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுள்ள ஏதேனும் செயல் என்று பொருள்படும் ;

"மாணவர்" என்பது கல்வி நிறுவனமொன்றின் மாணவர் ஒருவர் என்று பொருள்படும் ;

"பாலியல் தொந்தரவு" என்பது கல்வி நிறுவனமொன்றில் மாணவர் ஒருவருக்கு அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவருக்கு பாலியல் ரீதியான தொல்லை அல்லது தொந்தரவை ஏற்படுத்து வதற்காக குற்றவியல் வலோத்காரத்தை, வார்த்தை களை அல்லது செயல்களைப் பயன்படுத்துதல் என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.